**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 117/2023

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேணுகோபால் | கணவர் பெயர் | : ------ |
| தகப்பனார் பெயர் | சிவலிங்கம் | வயது | : 53 |
| கிராமம் | மேச்சேரி | நாள் | : 03.09.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. வாதியின் பெயரிலுள்ள உயில் சாசனம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். (மேற்கண்ட ஆவணத்தை வாதியே ஆள் குமார் என்பவரை வைத்து தட்டச்சு செய்து, பெற்று வந்து உயில் சாசனம் எழுதி கொடுத்தவரிடம் படித்து காண்பித்ததாக வழக்குரையில் தெரிவித்துள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் அவர்களது ஆட்சேபனையோடு தாக்கல் செய்யப்படுகிறது).

2. 14.08.1957 ம் தேதியிட்ட வாதியின் தாத்தா கோவிந்த செட்டி பெயரிலுள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 1997-2023 வரை வாதியின் தாத்தா கோவிந்த செட்டி பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகள் அசல் (எண்ணிக்கை 12) **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 1997-2023 வரை வாதியின் தாத்தா கோவிந்த செட்டி பெயரில் உள்ள குடிநீர் வரி ரசீதுகள் அசல் (எண்ணிக்கை 4) **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 1997-2024 வரை வாதியின் தாத்தா கோவிந்த செட்டி பெயரில் உள்ள குடிநீர் கட்டண பட்டியல் அட்டை அசல் (எண்ணிக்கை 2) **வா.சா.ஆ.5** ஆகும்.

6. 2022-2023 வரை வாதியின் தாத்தா பெயரிலுள்ள மின் கட்டண அட்டை மற்றும் மின் ரசீதுகள் (எண்ணிக்கை 2) அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. வாதியின் தந்தை சிவலிங்கம் பெயரில் ஏற்பட்ட கூட்டு பட்டா கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ-7** ஆகும்.

8. நான் கடந்த 25.05.2023 ம் தேதியில் மேச்சேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு கை நகல் **வா.சா.ஆ–8** ஆகும்.

9. என் பெயரில் கடந்த 26.10.2018 ம் தேதியில் வழங்கப்பட்ட இருப்பிட சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ. 9** ஆகும்.

10. 30.04.2012 ம் தேதியில் வாதியின் தாயார் வாதிக்கு எழுதி வைத்த எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ததற்கான ரத்து ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. 30.04.2012 ம் தேதியில் வாதியின் தாயார், 1 முதல் 4 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டு மூன்றாம் நபருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12. அ.வ.எண்.44/2024 ல் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.2/2024 ன் மனு மற்றும் நிரூபண பத்திரிக்கை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆகும்.

(கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு 15.10.2025 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.